# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **தமிழின் சிறுகதைகள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# தமிழின் சிறுகதைகள்

- ❖ சிறுகதை உலகின் தந்தை செகாவ்.
- ❖ சிறுகதை தோன்றிய முதல் இந்திய மொழி வங்காளி.
- ❖ தமிழ்ச் சிறுகதையின் முன்னோடி வீரமாமுனிவர்.
- ❖ தமிழின் முதல் சிறுகதை வ.வே.சு.ஐயரின் குளத்தங்கரை அரச மரம்.
- ❖ தமிழின் முதல் சிறுகதைத் தொகுப்பு மங்கயர்க்கரசியின் காதல்.
- ❖ தமிழ்ச் சிறுகதையின் தந்தை வ.வே.சு. ஐயர்.
- ❖ தமிழ்ச் சிறுகதையின் முன்னோடி வீரமாமுனிவர்.
- ❖ வட்டாரக் கதைகளின் முன்னோடி கி.இராஜநாராயணன்.
- ❖ கரிசல் கதைகளின் தந்தை கி.இராஜநாராயணன்.
- ❖ சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன். தமிழ்நாட்டின் மாப்பசான் புதுமைப்பித்தன்.
- ❖ தமிழ்ச் சிறுகதையின் தூண் புதுமைப்பித்தன். சிறுகதைச் செல்வர் புதுமைப்பித்தன்.
- ❖ தமிழ்நாட்டின் வால்டர்ஸ்காட் கல்கி. தமிழ் சிறுகதை இலக்கியத்தின் ஆசான் கல்கி.
- ❖ சிறுகதையின் சாதனை ந.பிச்சமூர்த்தி.
- ❖ சிறுகதையின் திருமூலர் மௌனி - என்று கூறியவர் புதுமைப்பித்தன்.

**19-ஆம் நூற்றாண்டில் சிறுகதை எழுத்தாளர்கள்:**

**வ.வே.சு.ஐயர்**

- ❖ முழுப்பெயர் வரகனேரி வேங்கட சுப்பிரமணியர் ஐயர் 1913 இல் குளத்தங்கரை அரச மரம் என்ற கதையை எழுதினார்.
- ❖ இது காட்டேர் கதா என்ற வங்க மொழியின் கதை தழுவல்.
- ❖ மங்கையர்க்கரசியின் காதல் என்ற சிறுகதை தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.
- ❖ மங்கையர்க்கரசியின் காதல் எட்டு சிறுகதைகளின் தொகுப்பு.
    - மங்கையர்க்கரசியின் காதல்
    - குளத்தங்கரை அரசமரம்
    - கமலா விஜயம்.
    - காங்கேயம்
    - எதிரொலியாள்
    - அனார்க்கலி
    - லைலா மஜ்னு
    - குழந்தை மணம் பற்றியது.

- ❖ ருக்மணி - நாகராஜன் திருமணம் பற்றியது, கணவரைத் தவறாகப் புரிந்து கொண்ட ருக்மணி குளத்தில் விழுந்து இறத்தல். அவள் கதையை அரச மரம் சொல்வதாக அமைதல். கதை இடையில் தொடங்குகிறது.
- ❖ மற்ற எழு கதைகளும் ஆசிரியர் கதை சொல்வதாக அமைந்தவை.

- லைலா மஜ்னு, அனார்க்கலி போன்ற பாத்திரங்களைத் தமிழுக்கு அறிமுகம் செய்தவர்.
- இவரின் மொழிபெயர்ப்புதான் காபூலி வாலா மூலம் தாகூர் எழுதியது.

1) வீரசாமிச் செட்டியாரின் விநோத ரசமஞ்சரி, தாண்டவராய முதலியாரின் - பஞ்ச தந்திதரக் கதைகள், செல்வக் கேசவராய முதலியாரின் அபிநயக் கதைகள் சிறுகதை உருவில் உருப்பெறத் தொடங்கின.
2) வ.வே.சு. ஐயர்: மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள், வ.வே.சு. வின் சிறுகதைத் தொகுப்பு ஆகும்.
3) குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை, தமிழின் முதல் சிறுகதை என்னும் பெருமையைப் பெறுகிறது.

   **ஆ. மாதவையா** : புனைபெயர் குசிகர், பெண்கள் முன்னேற்றம் மூடநம்பிக்கை, விடுதலை நோக்கு (உ.ம்) கோடாங்கி ராமுடு.

   1920-களுக்குப் பிறகு : காந்தியடிகள் வரவு இந்திய விடுதலைப் போராட்டச் சூழல். தேச ஒற்றுமை, விடுதலைப்போர், மது ஒழிப்பு முதலியவை கதைகளின் கொள்கைகளாயின.
4) ராஜாஜி : கொள்கை - குடியின் தீமை நூல் - திக்கற்ற பார்வதி.

**<u>இதழ் சார் எழுத்தாளர்கள்:</u>**

- 1933 முதல் 55 வரை மணிக்கொடி இதழ், சிறுகதையை ஓர் இயக்கமாகக் கொண்டு வளர்த்தது. எழுத்து இதழும் இதில் பங்கு கொண்டுள்ளது. இதில்,

1. கு.ப. இராஜகோபாலன்
2. ந.பிச்சமூர்த்தி
3. தி. ஜானகிராமன்
4. சி.ச. செல்லப்பா
5. டி.எஸ். இராமையா
6. புதுமைப்பித்தன்
7. வல்லிக்கண்ணன்.
8. அசோகமித்திரன்
9. கல்கி
10. கு.அழகிரிசாமி
11. லா. ச. ராமசாமி
12. ஜெயகாந்தன்
13. நா. பார்த்தசாரதி

ஆகிய எழுத்தாளர்களின் சிறுகதைகள் வெளிவந்தன.

1. **<u>தி.ஜானகிராமன்:</u>** உணர்வுகளுக்கு முதன்மை: அழகியல் பரிமாணம், உரையாடல், வடிவம். பெண்ணியச் சிக்கல் பேசுவது இவரது சிறப்பு. சிலிர்ப்பு கொட்டுமேளம், அக்பர் சாஸ்திரி, கோபுர விளக்கு இவரது கதைகள்.

2. **பி. எஸ். இராமையா:** சமூகச் சிக்கல்களில் நாட்டம், தீர்வுகளைப் பற்றி எடுத்துரைக்கவில்லை. நட்சத்திரக் குழந்தைகள் இவரது புகழ்பெற்ற சிறுகதை.

3. **புதுமைப்பித்தன்:** கபாடபுரம், புதிய ஒளி, சித்தி, ஆண்மை, அன்று இரவு, புதுமைப்பித்தன் சிறுகதைகள்.
4. கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும், எட்ட இருந்து வரம் பெறலாம், உங்களோடு இருந்து வாழ முடியாது.
5. **அகல்யை:** உள்ளத் தூய்மையை வேண்டுவது. கௌதமர் ஆறுதல் அடைந்து இந்திரனை மன்னிப்பது.
6. **சாப விமோசனம்:** பாவ விமோசனம் இல்லையே. துன்பக் கேணி, மனித யந்திரம், சிற்பியின் நரகம், தியாக மூர்த்தி, பொன்னகரம், கயிற்றரவு, கல்யாணி, நினைவுப் பாதை, மகாமசானம், வேதாளம் சொன்ன கதை. அன்று கேலி, கிண்டல் அங்கத்துடன் சமுதாயச் சிக்கல்களை எடுத்துரைத்தார். இவரது கதையிலே கல்லும் உயிர் பெற்று வரும். தொன்மக் கதைகளையும் ஆய்வுக்கு உட்படுத்தியதை சாபவிமோசனம், அகலிகை கதைகள் புலப்படுத்தும். கடவுள் மனிதனிடம் சிக்கினால் படும்பாட்டைக் கடவுளும் கந்தாசாமிப் பிள்ளையும் எடுத்துரைக்கும். ஒருநாள் கழிந்தது கபாடபுரம், கயிற்றரவு முதலானவை இவரது படைப்புகள். தமிழ்நாட்டின் மாப்பாஸான் என்றும், சிறுகதை மன்னன் என்றும் போற்றப்படுகிறார்.

7. **ஜெயகாந்தன்:** சிறுகதை தொகுப்புகள் : உதயம், ஒரு பிடி சோறு, இனிப்பும் கரிப்பும், தேவன் வருவாரா, சுமைதாங்கி, யுகசந்தி, புதிய வார்ப்புகள், சுயதரிசனம், குருபீடம், சக்கரங்கள் நிற்பதில்லை.

8. **சிறுகதைகள் சில:** அக்கினிப் பிரவேசம், புதுச் செருப்புக் கடிக்கும், உண்மை சுடும், பிரமோபதேசம், ஒரு பிடி சோறு, இருளைத் தேடி, பிரளயம், ஒரு பகல் நேர பாசென்ஜர் வண்டி, திரிசங்கு சொர்க்கம், இரவில் ஆண்மை, கல்யாணி.

9. **சு. சமுத்தரம் : முதல் சிறுகதை :** அங்கே கல்யாணம் இங்கே கலாட்டா. இது ஆனந்த விகடனில் வெளிவந்தது.
10. **சிறுகதைத் தொகுப்புகள்:** உறவுக்கு அப்பால், ஒரு சத்தியத்தின் அழுகை, காகித உறவு. சிறுகதைகள் சில : போதும் உங்க உபகாரம், ஒரே ஒரு ரோஜா, இலவு காத்த கிளி, பலவேசம்.

11. **கு.ப.ரா. :** புனர் ஜென்மம், காணாமலே காதல், கனகாம்பரம், காஞ்சன மாலை, சிறிது வெளிச்சம், விடியுமா, திரை.

12. **அறிஞர் அண்ணா:** பலாபலன், சுடுமூஞ்சி, அன்னதானம், பேய் ஓடிப்போச்சு, இரு பரம்பரைகள், சூதாடி, செவ்வாழை, தஞ்சை வீழ்ச்சி, பிடி சாம்பல், புலி நகம், ராஜாஜி ராஜா, சொர்க்கத்தில் நரகம்.

13. **கி. ராஜநாராயணன்:** கதவு, கன்னிமை, வேட்டி, அம்மா பிள்ளை, அப்பா பிள்ளை, நாற்காலி
14. **மௌனி:** அழியாச் சுடர், மணக்கோலம், காதல் அலை, மாறுதல், பிரபஞ்ச கானம், மனத்தேர், சாவில் பிறந்த சிருஷ்டி.

15. **பி.எஸ்.ராமையா:** பணம் பிழைத்தது, தழும்பு (மனித - மனித உறவு) நினைவு முகம் மறைக்கவில்லை, காம தகனம் (மனித - சமூக உறவு), நட்சத்திரக் குழந்தை கொத்தனார் கோயில் (மனித - தெய்வ உறவு)

16. **கு.அழகிரிசாமி:** சிரிக்கவில்லை, தவப்பயன், தெய்வம் பிறந்தது, இரு சகோதரர்கள், கற்பக விருட்சம், வரப்பிரசாதம், அன்பளிப்பு.

17. **ராஜாஜி:** நிரந்தர செல்வம், பிள்ளையார் காப்பாற்றினார், கற்பனைக் காடு.

18. **வல்லிக்கண்ணன் :** 500க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியவர். நாட்டியக்காரி, வல்லிக்கண்ணன் கதைகள், ஆண் சிங்கம், வாழ விரும்பியவன் முதலானவை இவரது சிறுகதைத் தொகுப்புகள்.
19. **அசோகமித்திரன் :** நடுத்தர வர்க்க மனிதர்களின் வாழ்வியல் சிக்கல்களைப் பேசுபவர். எளிமை சொற்சிக்கனம், இயல்பான உரையாடல் இவரது சிறப்பு. உரிமை வேட்கை, உத்தர ராமாயணம் இவரது தொகுப்புகள். அப்பாவின் சிநேகிதர் என்னும் சிறுகதைத் தொகுப்பிற்குச் சாகித்திய அகாடமி பரிசு பெற்றுள்ளார்.

20. **கல்கி :** நகைச்சுவை நடை. ஒரே மூச்சில் படிக்கத் தூண்டும் கதைப்பாங்கு திருடன் மகன் திருடன், வீணை பவானி முதலியன இவருடைய சிறுகதைகள்.

    கல்கி : கேதாரியின் தாயார், காரிருளில் ஒரு மின்னல், அபலையின் கண்ணீர், மாடத்தேவன் சுனை, ஸ்வப்பன லோகம், திருவெழுந்தூர் சிவக்கொழுந்து.

21. **கு. அழகிரி சாமி :** கரிசல் வட்டாரச் சார்பு, எளிய நடை, இயல்பான சித்தரிப்பு, அழகுணர்ச்சி, சமுதாயச் சிந்தனை ஆகியவை இவரது சிறப்புகள். **தவப்பயன், சிரிக்கவில்லை இவற்றில் குறிப்பிடத்தக்கவை.**

- ❖ **லா.ச.ராமாமிருதம் :** ஆழமான உணர்வுகளையும் வெளிக்கொணரும் ஆற்றல். வாழ்க்கை முரண், மனித முரண்களை வெளிக்கொணரும் கை.

- ❖ **மு.வ. :** இனிமை, எளிமை, கருத்தாழம் இவரது சிறுகதைப் பண்புகள். விடுதலையா, குறட்டை ஒலி ஆகியவை மு.வ.வின் தொகுப்புகள்.

- ❖ **கி. ராஜநாராயணன் :** கரிசல்காட்டு மணம் கமழ எழுத வல்லவர். தாத்தா சொன்ன கதைகள் - சிறப்புக்குரியது.

- **கி.வா. ஜகந்நாதன் :** நல்ல படைப்பாளி, கலைஞன் தியாகம், பவள மல்லிகை இவரது சிறந்த படைப்புகள்.
- **ஜெகசிற்பியன்:** இவரது, ஒரு பாரத புத்திரன் 1986 இல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது.
- **சு. சமுத்திரம்:** குற்றம் பார்க்கில், காகித உறவு, சோற்றுப்பட்டாளம், ஒரு கோட்டுக்கு வெளியே முதலானவை இவரது பங்களிப்புகள்.
- **சுப்ரபாரதிமணியன்:** திருப்பூர் நகரைக் களமாக்கி நகர மயமாதலின் வேகத்தில் சிதைவுறும் மனிதம் பற்றிச் சிறுகதைகள் எழுதி வருகிறார்.

**<u>பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள்:</u>**

- பெண்களின் சிக்கல்களை 1970-களுக்குப் பிறகு நேரடியாகப் பெண்களே பேசக் களத்தில் இறங்கினர். அதன் விளைவாக பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள் உலக அரங்கில் உள்ளது உள்ளபடி அரங்கேறத் தொடங்கின.
- **இராஜம் கிருஷ்ணன்:** 100க்கும் மேற்பட்ட சிறுகதைகள் படைத் -துள்ளார். பெண்களின் ஆளுமையை நிலைநாட்டுபவர். பெண்களின் கோணத்தில் செய்திகளை ஆராய்வார். காலங்காலமாக அடக்கி வைக்கப்பட்ட பெண்களின் உணர்வுகளைக் கோபமாக வெளிக் கொணர வல்லவர்.
- **ஆம்பை:** பெண்களின் சிக்கல்களை ஆழமாகப் பதிவு செய்பவர். வீட்டின் மூலையில் ஒரு சமையலறை என்னும் சிறுகதை பெண்ணின் வாழ்விடமும் கூட வீட்டின் மூலையில் வரையறுக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிடுகிறது. மல்லுக்கட்டும் சிறப்பான கதை.
- **சூடாமணி:** உள்ளத்தின் உணர்வுகளை உள்ளபடி புலப்படுத்த வல்லவர். கதைகள் தெறிப்பாக இருக்கும். ஒளியின் முன் இவரது தொகுப்பு.
- **அனுராதா ரமணன்:** நடையின் ஈர்ப்பால் கதையின் வேகத்தைக் கூட்டுபவர், பெண்களின் சிக்கல்களை மிக அழகாக வெளிப்படுத்த வல்லவர். காலச்சுமை தாங்கி சிறப்பான சிறுகதை.
- **திலகவதி :** பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளைப் பெண்கள் தட்டிக் கேட்க வேண்டும் என்னும் எண்ணத்தினர். குடிசையில் வாழுகின்ற இளம்பெண் நாகு தனக்கு இழைக்கப்பட்ட கொடுமையை எதிர்த்து காளியாக உருவெடுப்பதை காளி என்னும் இவரது சிறுகதை சித்தரிக்கின்றது.
- **பாக்யா :** அங்கீகாரம், வலம்புரி என்னும் இவரது சிறுகதைத் தொகுப்புகளிலும் நடப்பியல் மற்றும் பெண்களின் சிக்கல்களை முன் வைக்கிறார். பாக்யா, வாழ்க்கையில் மனிதர்களை நுட்பமாகப் படிப்பவராக இருக்கிறார். உலக இயல்புகளின் பிழைகளைத் தன்மையாகப் பதிவு செய்கிறார். படைப்பிலக்கிய வேள்விக்குள் தன்னை ஈடுபடுத்திக்

கொண்டுள்ள இவரின் எழுத்தில் பொறிகள் காணக் கிடக்கின்றன எனப் பால் நிலவன் குறிப்பிடுகின்றார்.

**சிறுகதைப் போற்றும் முயற்சிகள்:**

- ஆனந்த விகடன் ஆண்டுதோறும் சிறுகதைப் போட்டி நடத்தி வருகிறது. சிறந்த சிறுகதைக்குப் பரிசுகள் வழங்கப்படுகிறது. ஆனந்த விகடன் சிறுகதைப் போட்டியில் சிறை என்னும் கதைக்கு ரூ. 10000 அனுராதா ரமணன் பரிசாகப் பெற்றார்.
- **கணையாழி:** பத்திரிகை தரமான கதைகளை வெளியிட்டு வருகிறது.
- சென்னையில் உள்ள இலக்கிய சிந்தனை என்னும் அமைப்பு பத்திரிகையில் வரும் கதைகளில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துத் தொகுப்புகளாக்கிப் பதிவு செய்கின்றது.
- கலைஞன் பதிப்பகம் ஜெயகாந்தன், அசோகமித்திரன், பூமணி முதலான 20 எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளது.